அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா, அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அரசு பட்டா கொடுத்து விட்டால், அதை ரத்து செய்வதற்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அப்படி எங்காவது நடைபெற்று இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

கூத்தூர் கிராம அரசு புறம்போக்கில் நிலப் பட்டா வழங்கல்.

*வினா எண். 324—திரு. எம். கே. ராஜமாணிக்கம் . மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்கா, கூத்தூர் கிராமத்தில் அரசு புறம்போக்கில் குடியிருக்கும் பொது மக்கள் நிலப் பட்டா கேட்டதற்கு அரசு தரப்பில் மேற்படி நிலத்தின் மீது வழக்கு இருக்கிறது என்று பதில் கொடுத்தது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ) மற்றும் (இ) கூத்தூர் கிராமம், நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலத்திற்குப் பாதை அமைப்பதற்காக புல எண். 54/2-இல் உள்ள நிலம் ஆர்ஜிதம் செய்ததன் காரணமாக அந்த நிலத்தில் இருந்த 113 குடிசைகளையும் காலி செய்து, மாற்று இடம், புல எண். 45/1-இல் குடியமர்த்த உத்திரவிடப்பட்டது. அந்த நிலத்திற்கு உரிமை கோரி திருமதி மீனாட்சி சுந்திரத்தாம்பாள் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் இடைக்காலத் தடை உத்திரவு வழங்கப்பட்டதன் காரணமாக கண்ணனூர் கிராமம் புல எண். 82/1பி-இல் உள்ள நிலத்தில், எல்லாக் குடிசைவாசிகளும் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : தலைவரவர்களே, கூத்தூர் கிராமத்தில் மேம்பாலத்திற்குப பாதை அமைக்கக் கருதியதின் காரணமாக மாற்று இடம் கொடுக்க உத்திரவிடப்பட்டதாகவும் அந்த இடம் சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கும் இந்த இடத்தை பட்டா வழங்குவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாம லேயே அரசுக்குத் தவறான தகவலை கிராம அதிகாரிகள் கொடுத்து, ஏழை எளிய மக்கள் இருக்கும் அந்த இடத்தைப் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கமுடியாதுஎன்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. எனவே தவறான தகவல் கொடுத்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு அந்த இடத்தையே பட்டா செய்து கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அங்கே குடியிருந்த 113 பேர்களுக்கும் மாற்று இடம் கொடுக்கப் பட்டு, அங்கே குடியிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் பட்டா கொடுக்கும் பிரச்சனை இல்லை.

திரு. எம். கே. ராஜமாணிக்கம் : தலைவரவர்களே, கூத்தூர் கிராமத்தில் புறம்போக்கில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு மாற்று இடம் தருவதாக தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக் கிறது. அந்த 113 பேர்களுக்கும் சமயபுரம் கிராமத்தில் இந்திரா நகரில் குடியிருப்பு வழங்கியிருப்பது உண்மை. ஆனால் அவர்கள் குடியிருக்கின்ற நிலத்திற்குச் சம்பந்தம் இல்லாமல், ஏற்கனவே கூத்தூர் கிராமத்தில் இருந்த புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கேட்கிறார்கள், இதிலே அமைச்சருக்கு தவ றான தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பாலத்திற்குப் பாதை அமைக்க அந்த இடம் எடுக்கப்பட்டிருக் கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது தேவையில்லை என்று சொன்னால் மீண்டும் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லியிருப்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. இந்திரா நகரில் அவர்களுக்குப் பட்டா கொடுக் கப்பட்டிருப்பது உண்மை ; மாற்று இடம் கொடுக்கப்பட்டி ருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் ஏற்கெனவே இருந்த இடத்தில் அந்த ஏழை எளியமக்கள் விவசாயம் செய்து வந்தார் கள். அங்கே பாலம் கட்டுவதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் அந்த இடத்தை அவர்களுக்கு பட்டாப் செய்து கொடுக்க திருச்சி

1981 மார்ச் 2]

கலெக்டர் உத்தரவு போட்டும் வேண்டுமென்றே சிலர் செய்த அக்கிரமம் காரணமாக அந்த நிலம் கொடுக்கப்படவில்லை. அங்கே அவர்கள் பயிர் செய்திருந்ததையும் காலி செய்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? மீண்டும் கலெக்டர் உத்தரவுப்படி அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஏற்கெனவே திரு. ராஜமாணிக்கம் அவர்கள் கேட்டபோது அது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதே பதிலைத்தான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன்.

ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குப் பயிற்சி.

*வினா எண் 325 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் தற்பொழுது பணியாற்றிவரும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : ஆம் தொடக்கப்பள்ளிகளில் பணி புரியும் இளநிலை (Higher Grade) ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் தகுதியும் சம்பளமும் பெற வாய்ப்பளிக்கும் வகையில் அஞ்சல் வழி மற்றும் நேர்முக பயிற்சிமூலம் கல்வி அளிக்க மாநில கல்வி யாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (Scert) ஒரு தனிப்பிரிவு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1980, செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இந்த அஞ்சல் வழிக்கல்விக்கான பாடத்தொகுப்புகள் கல்வி வல்லுநர் குழுவால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. 1980, செப்டம்பர் முதல் பிப்ரவரி 1981 வரை நடக்கும் பயிற்சி வகுப்பில் 2500 இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். அடுத்து 1981–82-ல் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையும், அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலும் இரண்டு பயிற்சிகள் 5000 இளநிலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள இளநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை விகிதத்திற்கேற்ப இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.